பக்கங்கள் 12

RECEIVED 1980-1-16 PERIODICALS DIVISION

ஈழநாடு
The EELANAADU
50 சதம்

மலர் 21 தை 1 ஸபர் 26 இதழ் 337
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 15-1-80

ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது தித்திக்கும்




# இந்திரா அமைச்சரவை பதவியேற்றது

(புதுடில்லி)

**திருமதி இந்திராகாந்தியின் தலைமையிலான புதியஅமைச்சரவை நேற்றுக் காலை பதவியேற்றது.**

34 மாதகால இடைவெளிக்குப்பின்னர் மீண்டும் அரசகட்டில் ஏறியிருக்கும் திருமதி இந்திராகாந்தியின் அமைச்சரவையில் 15 அமைச்சர்களும்,7 ஸ்டேட் அமைச்சர்களும் உள்ளனர். இந்திரா அமைச்சரவையின் இரண்டாவது பட்டியல் இன்று அல்லது நாளை வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சில அமைச்சர்கள் விபரம் வருமாறு:

- ஆர், வெங்கட்ராமன்- நிதி.
- பிரணப்குமார் முகர்ஜி- வர்த்தகம்.
- பி.வி. நரசிம்மராவ்- வெளிவிவகாரம்.
- எச். சௌத்திரி- எரிசக்தி நீர்ப்பாசனம்.
- வி. சங்கரனும்- கல்வி.

(12-ம் பக்கம் பார்க்க)




## நாளைமுதல் மீண்டும் மறியல்

(யாழ்ப்பாணம்)

21 நாட்களாக லீவுகளை குறைத்ததற்கு ஆட்சேபம் தெரிவித்து, மீண்டும் இம் மாதம் 16ந் திகதி முதல் அரசாங்க காரியாலய வாசல்களில் மறியல்இயக்கத்தை நடத்துவதென நேற்று யாழ்ப்பாணத்தில் கூடிய அரசாங்க லிகிதர்சேவைச் சங்க யாழ். கிளைக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

யாழ் கிளைத் தலைவர் திரு. வி. பொன்னம்பலம் தலைமையில் நடந்த இக் கூட்டத்தில் மத்தியகமிட்டி உறுப்பினரான திரு. கந்தசாமி சமூகமளித்து கொழும்பு நிலைமைகளை எடுத்துக் கூறினர்.

### அறிவித்தல்

தைப்பொங்கல் பண்டிகையை முன்னிட்டு இன்று 15-1-80 செவ்வாய்க்கிழமை 'ஈழநாடு' அலுவலகத்திற்கு விடுமுறையாதலால் நாளை 16-1-80 புதன்கிழமை மட்டும் 'ஈழநாடு' வெளிவரமாட்டாது.

நிர்வாகி

## வெங்கட்ராமன் சுவாமிநாதன்

(புதுடில்லி)

திருமதி இந்திராகாந்தியின் அமைச்சரவையில் இடம் பெற்றுள்ள இருவர் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள்.

இவர்களில் ஒருவர் திரு, ஆர். வெங்கட்ராமன், மற்றவர் திரு. சுவாமிநாதன்.

திரு வெங்கட்ராமன் முன்னர் காமராஜர் அமைச்சரவையில் (தமிழ்நாடு அரசில்) கைத்தொழிலமைச்சராகவிருந்தவர் இவர் தஞ்சாவூரைச் சேர்ந்தவர். மற்றவர் திரு. ஆர். வி. சுவாமிநாதன், மத்திய விவசாய ஸ்டேட் அமைச்சர். இவர் இராமநாதபுரத்தைச் சேர்ந்தவர்.

இவர்கள் இருவருமே மத்திய அரசின் புதியமுகங்கள்.

## புதிய இடமாற்ற உத்தரவு

(யாழ்ப்பாணம்)

இடமாற்ற ரத்து உத்தரவு பெற்ற அரசாங்க ஊழியர்களுக்கு புதிய உத்தரவுகள் கிடைத்துள்ளது என்று அரசாங்க லிகிதர் சேவைச்சங்க யாழ். கிளை செயலாளர் திரு. வி. எஸ். கனகரத்தினம் நேற்று தெரிவித்தார். இந்த உத்தரவுகள் அடுத்தமாதம் 15ம் திகதி முதல் அமுலுக்கு வருமென்றும் அவர் தெரிவித்தார். (க)

அன்பர்கள், அனைவருக்கும் பொங்கல் வாழ்த்துக்கள்!

தேன்சிந்தும் ஐஸ்கிறீம் வகைகளுக்கு றிக்கோவுக்கு விஜயம் செய்யுங்கள்

றிக்கோ கோப்பியை உங்கள் கண்முன்பாகவே உடனுக்குடன் அரைத்துப் பெற்றுக்கொள்ள றிக்கோவுக்கு விஜயம் செய்யுங்கள்

றிக்கோ சுவீற்ஸ் அன் கிறீம் ஹவுஸ்,

370, ஆஸ்பத்திரி வீதி, (தொலைபேசி: 464 - 7889) யாழ்ப்பாணம்.

றிக்கோவுக்கு யாழ். நகரில் வேறு கிளைகள் இல்லை

வாடிக்கையாளர்களுக்கு எமது உளம்கனிந்த தித்திக்கும் புத்தாண்டு வாழ்த்துக்கள்!

இலங்கை மட்பாண்ட (செரமிக்) கூட்டுத்தாபனத்தின் உற்பத்திப் பொருட்களுக்கும் தரமான கோழிமுட்டைகளுக்கும் நாடவேண்டிய ஸ்தாபனம்

விமாக்கி

27/3 மின்சாரநிலையவீதி,
(பஸ்நிலையம் முன்பாக)
யாழ்ப்பாணம். தொலைபேசி: 8043

அன்பளிப்புப் பொருட்களை மலிவாகவும் தரமாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரிவிளம்பரம்

### பயிற்சி

வெளிநாடுகளில் தொழில்கள் பெறுவதற்கு நவீனமுறையில் வெல்டிங் (Electric & Gas) இலெக்றிக் வயறிங், ரேடியோ (Transistor) Building Technology, PMG Certificate பயிற்சிகள் 16-1-80 ஆரம்பமாகின்றன. National Institutes, 57, ...ங்சோல் வீதி, யாழ்ப்பாணம். இலவச கையேட்டிற்கு எழுதவும். 4597

நாடக, அரங்கக் கல்லூரியால் நடிப்பு, நெறியாள்கை, பிரதியாக்கம், ஒப்பனை, மேடை நிர்வாகம் ஆகியவனைத்திலும் பயிற்சி அளிக்கப்படும். ஜீ. சீ. ஈ. (உயர்தரம்) பாட நெறிக்கேற்பவும் பயிற்சிகள் அளிக்கப்படும். வகுப்பு ஆரம்பம்: 15- 1- 80. செயலாளர், நாடக, அரங்கக் கல்லூரி, ''தாயகம்'' திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம். 4618

### வகுப்புகள்

LLB-First in Laws. சட்ட முதற் பரீட்சை 1980/81. கொழும்பு, யாழ். முன்னணி விரிவுரையாளர்களால் 5-1-80 தொடக்கம் நடாத்தப் படுகின்றது. அச்சடித்த குறிப்புகளுடன் முதல் மர்த வகுப்புக்கு சகல மாணவர்களும் இலவசமாக சேர்த்துக் கொள்ளப்படுவர். Cantabia Institute 166, Hospital Road, Jaffna. 4630

### தேவை

சுழிபுரம் சத்தியக்காட்டுச் சந்தைக்கு முன்பாகவுள்ள குயின்ஸ் வியாபார நிலையத்திற்கு விற்பனையாளர் தேவை. நேர்முகமாக வரவும் ந. தவம். சழிபுரம். 4663

## ஒளிமயமான...

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

சாலையின் ஆக்கத்திலும் முன்னேற்றத்திலும் கண்ணும் கருத்துங்கொண்ட பெற்றோர்களையும் அபிமானிகளையும் கொண்ட நல்ல சூழலை உடையது. இச் சூழ்நிலைகளால் வேகமாக வளர்ச்சியடைந்து முன்னேறிக்கொண்டிருக்கின்றது!

கல்வியின் தரத்தாலும் வெளிப்புற வேலைத்திட்டங்களாலும் முன்னணியில் முன்னேறிக்கொண்டிருக்கும் இவ்வித்தியாசாலை ஒளிமயமான எதிர்காலத்தையுடையது.

நாகேசுவரி வித்தியாசாலை இருப்பிடச் சூழலாலும் பாடசாலை வளர்ச்சியினாலும் வெகு விரைவில் ஒரு மகாவித்தியாலயமாக மாறும்; மாறிவிட வேண்டும் என்பது ஊர் மக்களது பெருவிருப்பம். இப் பெருவிருப்பு நிறைவெய்த இறைவன் அருள் பாலிப்பானாக.

பொன்விழா மங்களகரமாக மகிழ்ச்சிகரமாகப் பொலிவு பெற்றுத் திகழ வாழ்த்துகின்றேன்.

பண்டிதர்
ச. குமரேசையர்
அதிபர்
நாகேசுவரி வித்தியாசாலை,
சரவணை.

## கரைச்சி தெற்கு ப. நோ. கூ. சங்கம்
## கிளிநொச்சி
# வெற்றிடம் நிரப்பல்
## கிராமியவங்கி முகாமையாளர் தரம் 11

மேற்குறிப்பிட்ட பதவி சம்பந்தமாக இலங்கை பிரசைகளிடமிருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றது.

1. வசிப்பிடத் தகமைகள்/ குறைந்தது இரண்டு வருடமாவது, அந்த மாவட்ட எல்லைக்குள் வசிப்பவராக இருத்தல் வேண்டும்.
2. வேதனம்: 250 / 400
   ..............................
   10 தர 10/ 12.50 தர 4
3. கணக்கியலுடன் க. பொ. த உயர்தரப் பரீட்சையில் மூன்று பாடங்களிலான சித்தியும், கிராமிய வங்கி நடவடிக்கைகளிலான இரண்டு வருட அனுபவமும்,
   அல்லது
   க. பொ. த. சாதாரண தரப் பரீட்சையில் 6 பாடங்களில் சித்தியும், கூ. வே, சாதாரண தர பத்திரமும், கிராமிய வங்கி நடவடிக்கைகளில் இரண்டு வருட அனுபவம்.
   அல்லது
   கணக்கு லிகிதர் தரம் 11 இலான ஐந்து வருட சேவை அனுபவம்.

விண்ணப்பிக்க விரும்புவோர் கடித உறையின் மேல் மூலையில் கிராமிய வங்கி முகாமையாளர் தரம் 11 க்கான விண்ணப்பம் என எழுதி ''பொது முகாமையாளர், கரைச்சி தெற்கு ப. நோ. கூ. சங்கம், கிளிநொச்சி'' என்னும் விலாசத்துக்கு 30 - 1 - 80 ம் திகதி பகல் 12-00 மணிக்கு முன்பு எமக்குக் கிடைக்கக் கூடியதாக பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கவும்.

இங்ஙனம்,
**பொதுமுகாமையாளர்.**

4665

தேசிய விலைக ஆணைக்குழு

# செத்தல் மிளகாய் விலை

## யாழ்ப்பாணத்தில் பொது விசாரணை

தேசிய விலைகள் ஆணைக்குழுவினால் 1979 டிசம்பர் 19 ஆந்திகதிய பத்திரிகையில் வெளியிடப்பட்ட விளம்பரம் தொடர்பாக யாழ்ப்பாணம் கச்சேரியில் 1980 ஜனவரி மாதம் 20 அந் திகதி சனிக்கிழமை காலை 11 மணிக்கு ஒரு பொது விசாரணையொன்று ஆணைக்குழு மேற்கொள்ளவிருக்கிறது.

யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த மிளகாய் உற்பத்தியாளர்கள், நுகர்வோர் சங்கங்கள், சந்தைப்படுத்தும் முகவர்கள் யாவரும் இப் பொது விசாரணைக்குத் தமது கருத்துக்களைச் சமர்ப்பிக்குமாறு அழைக்கப்படுகின்றனர்.

**கலாநிதி பீ. ஏ. எஸ். தகநாயக்க**

செயலாளர் நாயகம்

தேசிய விலைகள் ஆணைக்குழு

---

வாடிக்கையாளர்கள், நண்பர்கள், அன்பர்கள் அனைவருக்கும் **இனியபொங்கல் வாழ்த்துக்கள்**

சுவைக்கும் பொங்கலைவிட ரவர் கோப்பி அன் கூல்பார் பண்டங்கள் தனிச்சுவையானது, வெறும் புகழ்ச்சி யல்ல
ஐஸ்கிறிம், சகல பட்சணங்கள், கோப்பி, தேனீர், அனைத்தும் தனிருசி, ஆஹா என்ன ருசி

# ரவர் கோப்பி அன் கூல்பார்

324 மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம். (போன்: 7891)

---

அன்பர்கள், ஆதரவாளர்கள், நண்பர்கள் அனைவருக்கும் **இனிய பொங்கல் வாழ்த்துக்கள்**

சுரர் நாடுவோர் தவறாமல் நாடுவதற்கு சிறந்த நியாயவிலைக்கடைகளுள் ஒன்று

# பெனின்சுலா ரேட் சென்ரர்

இல. 61, மின்சாரநிலைய வீதி, (பஸ்நிலையம் முன்பாக) யாழ்ப்பாணம்.

---

பிளாக்ஸ் கிறீம் ஹவுஸ் வழங்கும் இன்றைய நிகழ்ச்சி

# ★ 16 வயதினிலே ★

பொங்கலன்று திறந்த வெளியரங்கு

ஈழத்து பாலசுப்பிரமணியம் · சுஜாதா அந்தநர்யக்கர் · கலாவதி சின்னச்சாமி
இணைந்து இசைக்கும் ராஜா ஜிக்கியின் கானங்கள்.
டிக்கற் நிகழ்ச்சி அரங்கில் கிடைக்கும். பிரவேசம்; 10/-, 5/-, 3/-,
இசை: மோகன்ராஜ் அறிவிப்பாளர்: மேஜர் சண் உலகசாதனை வீரர் நசீரின் டுவிஸ்ட் நடனம் நடைபெறும்.
அரங்கு நிறைந்த இசை நிகழ்ச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொங்கல் சிறுகதை

# மண்ணைத் தோண்டி.....

உதயச் செழுமையுடன் ஆதவன் இன்னும் கீழ்வானில் எழவில்லை. பனிப்புகாருக்கும் அவனுக்கும் நடந்த யுத்தத்தில் அவன் இன்னும் வெல்லவில்லையா? அல்லது இன்னமும் துயில் கலையவில்லையோ? குளிரிலே குத்திட்டு நிற்கும் நெஞ்சத்து-மயிர்களை கையால் மடிப்பதுபோல் இறுக்கிக் கொண்டு நிற்கிறார் சுப்பிரமணியம். இழையோடும் சூடு இதமாக இருக்கிறது. அந்த இதச்சுகத்தை இரக்கமற்றுக் கிழிப்பதுபோல் பெருமூச்சு சீறுகிறது.

இறந்துபோய்க் கிடந்த வரம்பினூடு நடந்தவர் வேதனை இதயத்தில்கருக்கட்ட இப்படி இருந்தவரல்ல. மண்ணிலே வியர்வைசிந்தி உழைத்தவர். அவரது சொந்த மண்ணைத்தோண்டி உழைத்து-கிழக்கு வான் அடியில் ஆதவன் எழுமுன்னே தோட்டம் வந்து மேற்குக்கடலில் சூடு நீக்க இறங்கிய பின்பு வீடு திரும்பியவர் அவர். அந்த உழைப்பில் தான்எத்தனை இன்பம். இதன் விளைவாக மகனைப்படிக்கவைத்தார். இவரது வியர்வையில் விளைந்த பணத்தில் மகனின் படிப்பு தொடர்ந்தது.

அப்படி எத்தனை இனிய பொங்கல்கள்.

பொங்கல்நாளென்று வீட்டினுள்ளே இருந்துவிட முடியுமா? பயிர் ஜீவன்களுக்கு பராமரிப்பு வேண்டாமா? ஆத மலடுபோல் கிடக்கிறது.

மெயில் ரயில் அட்டகாசமான சத்தத்துடன்வருகிறது. இதில்தானே வருவதாக கொழும்பில் உத்தியோகம் பார்க்கும் மகன் எழுதினான். பொங்கலுக்காக வருகிறானும். பொங்கல்என்று கொண்டாட அவனுக்கென்னயோக்கியதை. 'அப்பா இனி நீ தோட்டம் செய்யப்படாது. பிறகு எனக்குத்தான் மரியாதையில்லை'

(9-ம் பக்கம் பாாக்க)

காவலூர் எஸ். ஜெகநாதன்

அயல் பக்கங்களிலுள்ள தோட்டங்களைப் பார்க்கிறார். அங்கங்கே ஆண்களும் பெண்களுமாக இயக்கங்கள் முறுக்கேறுகின்றன. மண்ணைத் தோண்டியபடி சிலர், தண்ணீர் ஊற்றியபடி சிலர். அவரவர்கடமையில் முனைப்பாக... சுப்பிரமணியம் மட்டும் செயலிழந்தவராக...

இன்று பொங்கல் திருநாள் என்ற நினைப்பு மனதைநெருடுகிறது. உடல் செயலிழந்து விட்டால் மனமுமா...

அதில் கோடு கிழிக்கும் கடந்தகால நினைவுகளைப் போல வயல்களை ஊடறுத்துச் செல்லும் நீளும் வீதி ரயில் நிலையத்தில் முடிகிறது. ஆனால் நினைவுகள் முடியவில்லை, சுப்பிரமணியம் முன்பெல்லாப் வன் இன்னும் முகம் காட்டவில்லை. கையை நெஞ்சோடு இறுக அணைத்தபடி ரயில்நிலையப் பக்கம் பார்க்கிறார். அவசர அவசரமாக வேலையை முடித்துக்கொண்டுவீடுநோக்கி விரையும் விவசாயிகள். ஆதவன் உலாப் புறப்படுமுன் வீட்டுமுற்றத்தில் தயாராகும் அடுப்பில் பொங்கல் பானையை ஏற்றும் இலக்கு. அவர்கள் விரைகிறார்கள்.

அந்த விரைவு சுப்பிரமணியத்திடம் இல்லை.

துயரநிதானத்துடன் நிற்கிறார். அவரது முற்றத்தில் பொங்கல்பானைஇல்லை. அதை ஏற்ற மனம் விடவில்லை. ஏக்கத்தோடு தனது மண்ணைப்பார்க்கிறார். எப்படி விளைந்த மண். அவரது உழைப்பின்றி பிறவி

# தென்கரம்பனில் புதிய கட்டிடத் திறப்பு விழா

(ஊர்காவற்றுறை) கரம்பொன் தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் புதிய கட்டிடத்திறப்பு விழாவும் பட்டிப்பொங்கல் விழாவும் நாளை புதன்கிழமை மாலை சங்கத்தலைவர் திரு.பி. எஸ். அல்பிரட் தலைமையில் நடைபெறவுள்ளது.

ஊர்காவற்றுறை எம். பி. பண்டிதர் கா. பொ இரத்தினம் உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். சடாட்சர சண்முகதாஸ் ஆகியோர் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்கின்றனர், நிர்வாகச் செயலாளர் திரு. எஸ். குகநாதன் வரவேற்புரையாற்றுவார் வணபிதா கிளாரன்ஸ் அடிகளார் சட்டத்தரணி மு. சண்முகநாதன் எழுத்தாளர் காவலூர் எஸ். ஜெகநாதன் பெருப்பாக உத்தியோகத்தர் சு. சுந்தரேசன் தி. நடராசா ஆகியோர் சிறப்புரையாற்றுவர் கு. கே. எஸ். பாலச்சந்திரனின் பல்சுவைக்கதம்ப நிகழ்ச்சியும் இடம்பெறும். (கு)


தமிழர் திருநாளாம்

பொங்கல் திருநாளின்று

எமது வாடிக்கையாளர்கள், ஆதரவாளர்கள், அன்பர்கள் அனைவருக்கும்

எமது உளங்கனிந்த

பொங்கல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்

சுபாஸ் டூரிஸ்ட் ஹோட்டல் லிமிட்.

15, விக்டோரியா வீதி ... யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 7228 தந்தி: டூர்சுபாஸ்

சுபாஸ் கபே

176, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 578


## உழவரெல்லாம் இன்பமுற

வான்மகளை நம்பி மக்கள்
வயலெல்லாம் மணி விதைத்தார்
தேன்மழையாய்ப் பொழிந்து அவரை
தேசமெல்லாம் வாழ வைத்தாள்
நான்மறையும் போற்று திங்கள்
நாயகனை வாழ்த்தி இன்று
தேன்பாகும் பால் பருப்பும்
சேர்த்தினிய பொங்கல் செய்தோம்!

புத்தரசி குத்தி வந்து
பொங்கலிட்டுப் போற்று கின்றோம்
சித்தமும் சிவ னோடும்
செம்மையுற வாழ்த்து கின்றோம்
இத்தரையில் உழவரெல்லாம்
இன்பமுற வேண்டு மென்று
நித்தம் இறை படிய
நெஞ்சுருகப் பாடுகின் றோம்.

ஜீவா - நாவுக்கரசன்


அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் இனிய பொங்கல் வாழ்த்துக்கள்

ஈழ மக்களின் அபிமானம் பெற்ற தயாரிப்புகள்

0 அப்பளம் 0 ஊறுகாய் 0 மோர்மிளகாய் 0 வேப்பம் பூ வடகம் 0 பசு நெய் 0 அருஞ்சுவை உணவு

0 சகல சிற்றுண்டி வகைகள் அனைத்தையும் பெறலாம் அனைவரதுஓடர்களும்உடனுக்குடன் கவனிக்கப்படும்.

ஸ்ரீ தாமோதரவிலாஸ் - ஸ்ரீ ராமகிருஷ்ணு

239, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம், போன்: 7065.

9, நவீனசந்தை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம், போன்: 7497.



சுவைத்திடும் பொங்கலை ருசித்துமகிழ்ந்திடும் வேளையில், உங்கள் அனைவருக்கும் இனிய பொங்கல் வாழ்த்துக்கள்

இளைய தலைமுறையினரின் எண்ணம் போல் வர்ணத் துணிகளை தேர்ந்தெடுக்க, நகரில் ஜவுளிக்கடல் "மணியம்ஸ்"

மணியம்ஸ் ரெக்ஸ்ரைல்ஸ்

16, நவீன சந்தை, யாழ்ப்பாணம், தொலைபேசி: 7545

மணியம்ஸ் - 15 யூபிலி பஜார் - 54 நவீனசந்தை யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இன்றைய பலன்

தை மாதம் 1-ம் திகதி
செவ்வாய்க்கிழமை
**15-1-1980**

மேடம்: சத்துருக்களால் கவலை அதிகரிக்கலாம் ஏமாற்றத்திற்கு இடமுண்டு. பிரயாணத்தைப் பின்போடவும்.

இடபம்: கண்ணியமான நடவடிக்கைகளில் ஈடுபடுவீர்கள் சிலர்வாழ்க்கையில் காதல் அரும்பும் மகிழ்ச்சிகரமான தினம்.

மிதுனம்: கொடுக்கல் வாங்கல் மூலம் பகை உண்டாகலாம் மேலதிகாரியின் கண்டிப்புக்கு இலக்காகுவீர்கள் துக்கதினம்.

கடகம்: மூத்தோர்கள் உதவிக்கு இடமேற்படலாம். பிதாவழிப் பெருமையுமுண்டு கல்வியிலும் நன்மையுண்டு.

சிங்கம்: வாழ்க்கையும் வளம் பெறும். எதிரிகள் மத்தியில் ஏற்படும். மனமாற்றம் உங்கள் செவாக்கை வளர்க்கும் பொதுசனத்தலைமையும் கிடைக்கும்.

கன்னி; வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கு பலவழிகளிலும் முயற்சி செய்வீர்கள் பொருள் விருத்திக்குமிடமுண்டு உற்சகமான வரவேற்புமுண்டு.

துலாம்: அபாயகரமான தொழில் ஈடுபடுவோர் அவதானம் வேண்டும் மதுபானத்தை தவிர்ப்பதுடன் தொழிலும் கவனம் வேண்டும்.

(12-ம் பக்கம் பார்க்க)


அன்பர்கள், ஆதரவாளர்கள், நண்பர்கள்
அனைவருக்கும் இனிய

பொங்கல் வாழ்த்துக்கள்!

எம்மிடம்,
பலசரக்கு, சாய்ப்புச் சாமான்கள்,
அலங்கார, அழகுசாதனப் பொருட்கள்

அனைத்தையும் நியாய விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

அப்பையா ஸ்ரோர்ஸ்
வட்டுக்கோட்டை.



ஆதரவாளர்கள் அனைவருக்கும்
எமது

பொங்கல் வாழ்த்துக்கள்!

- பாஸ்போட், விசா.
- விமான ஆசனப்பதிவு
- இன்ரநாஷனல் டிரைவிங் லைசென்ஸ்

மற்றும்
வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட
றெடிமேட் ஆடைகள், சேட்டிங், சூட்டிங்,
நைலெக்ஸ் சாறிவகைகளுக்கு
இன்றே விஜயம் செய்யுங்கள்.

கவிதாஸ்

22, நவீனசந்தை மேல்மாடி, யாழ்ப்பாணம்.
போன்: 8139



நல்லூர் வேல்முருகன் புத்தகசாலை
ஸ்தாபனத்தாரின்
இனிக்கும் புத்தாண்டு பொங்கல் நல்வாழ்த்துக்கள்
உங்கட்கு தேவையான

- சகலவிதமான பாடசாலைப் புத்தகங்கள்
- அப்பியாச மொனிற்றேர்ஸ் கொப்பிகள்
- இலங்கை இந்திய வாரமாத சஞ்சிகைகள் கதைப்புத்தகங்கள்
- வாழ்த்து மடல்கள்
- தலைசிறந்த எழுத்தாளர்களின் தரமான கலை இலக்கியப் புத்தகங்கட்கும்
- மற்றும் அங்காரப் பொருட்கட்கும்
- புத்தாண்டில் புதிய அறிவு பெற்று புதுமனிதராக உருமாற என்றும் நீங்கள் நாடவேண்டிய ஒரேயொரு ஸ்தாபனம்.

உரிமையாளர்: வே. லிங்கசாமி

வேல்முருகன் புத்தகசாலை
[நல்லூர் ஆலய முன்பாக]
இல. 246, பருத்தித்துறை விதி, நல்லூர்.
யாழ்ப்பாணம்.

(V. V. P. ஆடர்கள் உடன் கவனிக்கப்படும்)



"அனைவருக்கும் எமது உளம் கனிந்த பொங்கல் வாழ்த்து உரித்தாகுக"



கடின உழைப்புக்கு நிகர் எதுவுமில்லை.
அன்பளிப்பு: மில்க்வைற், யாழ்ப்பாணம்.

ஆதரவு பெருகுதல் அறப்பணிக்கே உதவும்.
மில்க்வைற் த. பெ. இல. 77
யாழ்ப்பாணம்.



பொங்கல் வாழ்த்துக்கள்!
பொங்கல் மகிழ்ச்சி என்றும் நிலைத்திட எமது நிறுவனத்தில்
தங்க, வைர நகைகளை தெரிவுசெய்யுங்கள்
சிறந்த வேலைப்பாடுள்ள தங்க வைர நகைகளை
விரும்பிய டிசைன்களில் தெரிவு செய்யலாம்.

ஓடர்கள் குறித்த தவணையில் சிறந்த முறையில்
செய்து கொடுக்கப்படும்.

செல்லையா சிவபாதலிங்கம்

வைரக்கல் நகை வியாபாரம்
220, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7794.



அன்பர்கள், ஆதரவாளர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் இனிய
தைப்பொங்கல் வாழ்த்துக்கள்!

Robin

Robin Kerosene Engine



வட இலங்கையில் விவசாயத்தில் முன்னணி வகுப்பது "றெமின் சென்றிக்" வாட்டர் பம்புகளே ஏவ்விதமான ஆழமான கிணற்றிலிருந்தும் இலகுவில் நீரை வெளியேற்றுவதே இதன் சிறப்பியலாகும்.
உங்கள் விவசாய தேவைகளுக்கு இன்றே நாடுங்கள் நியூரோன் எலெக்ரிக்கல்ஸ் மற்றும் மின்சார நீர் இறைக்கும் பம்புகளுக்கும்.

நியூரோன் எலெக்ரிக்கல்ஸ்
141-143, ஸ்ரான்லி வீதி. யாழ்ப்பாணம். தொலைபேசி 7016


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் தைத் திருநாள் தரணியின் பெருநாளாம்

இல்லம் எல்லாம் வெண் பொங்கல் - உள்ளம் எல்லாம் மகிழ்ச்சிப் பொங்கல். காலமெல்லாம் வியர்வைபொங்க உழைத்திட்ட உழைப்பாளர் பெருமையுடன் கொண்டாடும் தைப்பொங்கல். அப் பொங்கல்ப் பெருவிழா தமிழினத்துத் தனிச்சொத்து என்று எண்ணுகையில் பெருமையினுல் பொங்காத தமிழ் இதயம் எதுவுமில்லை.

பாடுபட்ட பாட்டாளி- பயிர் விளைந்து சிரிக்கையிலே உள்ளப்பூரிப்படைகின்றுன், பச்சைவயல்வெளியில் பால் மணக்கும் நெல்மணியை அறுத்ததுமே ஆனந்த நடனமிடுகின்றுன். அந்த ஆனந்த வெளிப்பாட்டின் கலாச்சாரப் பிரதிபலிப்பே தைப்பொங்கல் என்கின்ற தைத்திருநாள்.

## உழைப்பாளர் ஒருகுலத்தார்

மகிழ்ச்சியின் எல்லையிலே மகிழ்கின்ற ஏர் உழவன் செய்நன்றி மறவாச் செந் தமிழ்ப் பண்புவழி நின்று வயற்காட்டில் பாடுபட்ட தோழர்கள் எல்லோருடனும் கூடிப்பாடி ஆடி மகிழ்ந்திட கூடுகிருன் பொங்கல்விழாவான இன்று. கமத்துவத்தின் பெருமை உணர்ந்து உழைப்பாளர் அனைவருமே ஒருகுலமாய் புத்தரிசி பொங்கலிடும் வேளையிலே 'இறைவன் உலகத்தின் முதலாளி அவனுக்கு நான் ஒரு தொழிலாளி' எனும் தத்துவத்தின் வழிநின்று அவ் விழாவின் மையப் பொருளாக இறைவனை ஏற்றுகிருன் ஏர் உழவன்.

-- பற்றிமாகரன் --

புத்தரிசி முதற் பொங்கல், படைத்தவனுக்கு காணிக்கையாகப் படைக்கப்படுகிறது! ஆண்டவனின் ஆட்சியின் நடைமுறைக் காட்சியாகத் தெரிகின்ற ஆதவனுக்கே எம் முன்னேர் படைப்பிட்டுக் காணிக்கை செய்தனர். அதன் தொடர்ச்சியாக இன்றும் மதரீதியான பொங்கல் விழா சூரியனுக்குப் பொங்கலிடுவதுடன் ஆரம்பமாகின்றது.

## பாட்டாளிகள் திருநாள்

மதத்தை ஏற்க மறுக்கின்றவர்கள்கூடத் தைப்பொங்கலைப் பாட்டாளிகள் திருநாளாக ஏற்றுக் கொண்டாடும் பண்பினை நாம் காணலாம். உழைக்கும் வர்க்கத்தின் பலத்தையும், ஒற்றுமையையும் வலியுறுத்தும் விழாவாக இவ் விழா பரிணமிக்கிறது. வர்க்கங்களைப் பற்றித் தத்துவங்கள் பேசிய நாடுகள்கூட வியக்கும் வண்ணம் உழைப்பின் திருநாளாகத் திகழும் தைப்பொங்கலின் மகத்துவத்தைத் தமிழர்கள் சரிவரப் புரிந்துகொள்ளவேண்டும்.

## உலகப்பெருவிழா

தைப்பொங்கல் ஒரு மத விழா அல்ல. மதக்கலப்பற்ற விழா. ஒரு இனவிழா அல்ல. தமிழ் இனத்திலிருந்து பிறந்தாலும் அகில உலகத்து உழைப்பாளர்களுக்கும் உரிய விழா. எனவே தைப்பொங்கல்- உழைப்பின் திருநாள் என்பதே இன்று 'ஏற்புடைய கருத்தாக கருதப்படுகிறது.

உழைப்பின் திருநாளைக் கொண்டாடும் வேளையில் ஒரு நாளில் புத்தாடை- பலஉணவு பலகேளிக்கை என வெளிவேஷங்கள் போட்டுவிட்டு மறுநாளே உழைப்பின் அவசியத்தை- உழைப்பாளரின் தேவைகளை- நாம் மறப்போமாஞல் "உழைப்பின் திருநாள்" அர்த்தமற்ற கேலிக் கூத்தாகி விடும். எனவே உழைப்பின் திருநாளைக் கொண்டாடும்நாம். உண்மை உழைப்பு, உழைப்புக்கேற்ற கூலி, உழைப்பாளர் வாழ்வு வளம்பெறும் வழிகள், உழைப்பால் கிடைக்கும் விளைவு அனைவருக்கும் கிடைக்கக்கூடிய வகைகள் என்பனபற்றி இந்நாளில் அக்கறை செலுத்த வேண்டும், முதல்- உற்பத்தி- பரிமாற்றம் என்பன ஓரிடத்தில் குவியாது அனைவர்க்கும் சமமாகப் பகிர்ப்படும் பொன்னுன காலத்தை உருவாக்கக் கூடிய சிந்தனைகள் இந்நாளில் உருவாகட்டும். அரைகுறை ஆடையுடனும் அரைகுறை உணவுடனும் உழைக்கும் மனிதர்களை நடமாடவைத்து - சாதி என்றும், சமயமென்றும் பாகுபாடு பாராட்டி, பெயரளவில் உழைக்கும் திருநாளை உலகுக்கு அறிமுகப்படுத்தாது, நாம் உலகுக்கு அறிமுகம் செய்த "உழைக்கும் திருநாளின்" தத்துவங்களை நமது இனமே தனது விளைவுப் பெறுமானங்களாக மாற்றி, பாருக்கு நல் வழிகாட்ட அனைத்துத் தமிழரும் இந்நாளில் உறுதிபூணுவோமாக.

நீர் பொங்க- நிலம் பசுமையில் பொங்க- உள்ளங்களில் மனிதத்தன்மை பொங்க- இல்

(7-ம் பக்கம் பார்க்க)

## உழைப்பவர் கைகள் ஓங்கிடும் நாள்

உழைப்பவர் கைகள் ஓங்கிடும் நாள் - அவர்
உள்ளம் மகிழ்வால் பொங்கிடும் நாள்!
விளைபொருள் இல்லம் புகுந்திடும் நாள் - பூமி
வளமது பொங்க சிரித்திடும் நாள்

மங்கிய வாழ்வில் மாண்புடனே - வளம்
பொங்கிட தானியம் புகுந்திடும் நாள்!
சங்கொலி எங்கும் முழங்கிடவே - இல்ல
மங்கையர் செங்கதிர் ஏற்றிடும் நாள்!

சொந்தங்கள் சூழப் பந்துக்கள் கூடி - கதிர்
வந்தனை செய்து விருந்திடும் நாள்!
நொந்தவர் காணும் நோய்பிணி போக - புது
சிந்தையில் தெளிவு பொங்கும் நாள்!

– செல்வி தேன்மொழி அருளம்பலம்.

## வளங்கள்பல்கப் பொங்கவே!

பொங்கல் திருநாள் பொலிவாக
பொங்கிப் பொலிந்து வளமோங்கி
எங்கும் பரவி உழவனது
உள்ளம் போலத் தார்மீகம்
தங்கித் தளிர்த்துத் தரணியிலே
தாகந் தீர மக்களினம்
அங்கம் எல்லாம் உயிர்ப்பெய்தி
அயரா துழைக்க வாழ்த்துவமே!

ஏக்கம் நீங்கி ஏருழவர்
ஏற்றங் காண வழிப்படுத்தி
ஊக்கங் கொடுத்து வாழ்வதனை
உயர்த்தல் அரசின் கடனுகும்
தேக்க மின்றி உற்பத்தி
தேசமெல்லாம் பரவிவர
ஆக்கஞ் சேர்க்கும் பணிபலவால்
ஆகும் நிறைவெனப் பொங்குகவே!

பெரிய இனங்கள் மனநிலையைப்
பேசிப் பகிர்ந்து பெருமனதில்
உரிய இடத்தை உரிமையினை
ஒத்துப் பேசி ஒருங்கிசைந்து
விரிவாய்ப் பயனை நாமெல்லாம்
அரிய வளங்கள் பலவற்வை
விருப்பம் போல அனுபவிக்க
ஆக்கிச் சுவைக்கப் பொங்குகவே!

-எஸ்.சி. எஸ். சிதம்பரநாதன்


விவசாயிகளே!

■ மிளகாய் ■ உருளைக்கிழங்கு
■ வெங்காயம் ■ நெல்
■ மரக்கறிவகை ■ பழவகை

ஆகிய எல்லாப்பயிர்களைப் பாதிக்கும், பூச்சிபுழுக்கள்-நோய்கள்களைகள் ஆகிய பீடைகளைக் கட்டுப்படுத்தவும், அழிக்கவும் எல்லாவித

கிருமிநாசினிகள்
பங்கசுகொல்லிகள்
களைக்கொல்லிகள்

எப்பொழுதும் சுலபமாகவும், கலப்பற்றும் எங்களிடம் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
பசளைவகைகளும் கிடைக்கும்.



உங்கள் விவசாய பிரச்சனைகள் எதுவானுலும் எங்கள் இலவச அறிவுரைகளுக்கு இன்றே நாடுங்கள்

AGROS

அக்ரோஸ் லிமிட்டெட்

56, கந்தபபசேகரம் வீதி, யாழ்பபாணம்
(புதிய நிர்வாக அதிகாரி- ஜெகந்சன்ஸ்- கொழும்பு)



அனைவருக்கும் எமது அன்புப் பொங்கல் வாழ்த்துக்கள்!

யாழ். மக்களின் சிறந்த படப்பிடிப்பாளர்கள்

★ பாரத் ஸ்ருடியோ ★

கஸ்தூரியார் வீதி (போன்: 252) யாழ்ப்பாணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நலம் காட்டும் பொங்கல் வா!

தையும் பிறக்குதாம்
வழியும் காட்டுதாம்
பெய்யும் மழையுட
வெயிலும் விளைக்குதாம்
செய்யும் தவபலன்
செறிபுகழ் கூட்டுதாம்
தெய்வம் துணைஎங்கும்
பால்பொங்கும். கலைகாண்போம்.

மாடுகள் ஒருசுகம்
மனிதனுக் கொருசெல்வம்
தேடியே அடுத்தநாள்
அதற்கொரு பொங்கலாம்.
ஆடியே பட்டங்கள்
ஆகாயம் அழகிடும்.
நாடுகள், காலங்கள்
நலம்காட்டும் பொங்கல் வா!

-மேலைப்புலோலி
மு. சு. கதிர்காமத்தம்பி

---

## என்றும் இன்பம் பொ

### இன்றைய பொங்கல் வழிகாட்ட

இன்று தைப்பொங்கல். எண்ணுகையில் மனதில் ஓர் உணர்ச்சிப் பொங்கல்- எழுகதிர் எழுமுன்னே காலமெல்லாம் எழுகின்ற ஏழைமகன், எழுகதிர் எழுகின்ற நேரத்தில் புதுப்பானை ஏற்றி, புத்தரிசி இட்டு, 'பொங்கலோ பொங்கல்' என்று ஆனந்தத்தால் கூவுகின்ற காட்சியைக் காண்கையிலே ஒரு மகிழ்ச்சிப் பொங்கல் ஊரெல்லாம் பரவுகிறது.

ஆகா! ஏழை சிரிக்கின்ற இந்தக் காட்சி, காலமெல்லாம் நிலையாதா? மனதிலே ஒரு ஏக்கப் பொங்கல். இன்று சிரிக்கின்ற ஏழை காலமெல்லாம் அழுகின்ற வாழ்க்கையை வாழக் காரணமென்ன? ஆண்டாண்டுகாலமாய் உழைக்க ஒரு கூட்டம், அந்த உழைப்பைச் சுவைக்க ஒரு கூட்டம் எனச் சமுதாயப் பிளவு நிலை வளர்ந்துவிட்டதன் எதிரொலிதான் அழுகைக்குரல். இந்த அழுகைக்குரலை அழித்தொழித்து உழைப்பாளனின் பெருமையை நினைவூட்டி சிந்தனையாளரிடை சிந்தனைப் புரட்சி செய்ய நம் கலாச்சாரம் படைத்த பரிசுதான் இப் பொங்கல் விழா.

எம்மிடைவர்க்கங்கள் என்றுமே போரிட்டுக்கொண்டு தான் இருக்கின்றன. ஆனல் அந்த வர்க்கப்பகைமை எம்மிடையே குறையவேண்டுமென்றால் சிந்தனை வளரவேண்டும். சமத்துவம்- சம உரிமை- கூடி மகிழும் பண்பு இவை பரவ வேண்டும். இந்தப் பரவு கையை ஏற்படுத்தவேண்டுமென்னும் நல்நோக்கோடு மலர்வதுதான் இப்பண்டிகை. ஆகவே பொங்கல் விழாவில் மகிழ்ச்சிபொங்க சிரிக்கும் நாம்- நம்மால் மற்றவர்கள் மனதிலும் மகிழ்ச்சி பொங்கவைக்க முடியுமென்பதை உணரவேண்டும். நாம் வாழ்வது மட்டும் போதாது. நம்மை வாழவைக்கும் அத்தனை பேரும் வாழவேண்டும். ஒரு மனிதனல் தனித்து இயங்கமுடியாது. ஆகவே அம்மனிதன் தன்னேடு தனது சமுதாயத்தை இணைத்து ஒரு உட லாக கருதவேண் ... உழவரது ஆ ... மணிகளும் ... மாம் புதுப்பா ... யரது ஆக்கமா ... ஒன்றிணைந்து ... மகிழ்ச்சியை ... போல் சமுதா ... பல நிலைகளி ... நாமும் ஒன்றி ... தாய மகிழ்ச்சி ... வித்து உலகெ ... பொங்க ... இன்றும்போல் ... பத்தை ... எம் கையிலே ... பதித இந்நா ... துவோம்.

-- குருநகர் தங்கராசா --

---

அனைவருக்கும் அன்புகலந்த
பொங்கல் வாழ்த்துக்கள்
உங்களுக்குத் தேவையான
**அழகிய பவுண் நகைகள், தங்கப்பவுண், வைரங்கள்**
ஆகியவற்றுக்கு
**கே. என். எம்.**
# மீரான் சாஹிப்
தங்கப்பவுண் நகை மாளிகை
கன்னதிட்டி, போன்: 585 யாழ்ப்பாணம்.

---

அனைவருக்கும் அன்புகலந்த
பொங்கல் வாழ்த்துக்கள்!
கல்யாண வைபவங்களுக்கேற்ற
0 கூறைச் சேலைகள்
0 பட்டு வேட்டிகள்
நாகரீக ஜவுளிகளுக்கு இன்றே விஜயஞ்செய்யுங்கள்
## க. நாகமுத்து அன் சன்
48, 50 பெரிய கடை - யாழ்ப்பாணம்.
போன்: 7475
0 அழகிய சேட்வகைகள்
0 பெல்பொட்டம்
0 சிறுவர் ஆடைகளுக்கும்
சிறந்த ஸ்தாபனம்! மீண்டும் வருக நன்றி!

---

அனைவருக்கும் அன்புகலந்த
**பொங்கல் நல்வாழ்த்துக்கள்!**
கண்ணுக்கினிய நகைகளுக்கு ஜப்பான் ஜுவலர்ஸ்
கருத்தைகவரும் நகைகளுக்கு ஜப்பான் ஜுவலர்ஸ்
மாற்றுக்குறையாத நகைகளுக்கு ஜப்பான் ஜுவலர்ஸ்
ஞாபகத்தில் என்றும் வைத்திருங்கள்
## ஜப்பான் ஜுவலர்ஸ்
64, கன்னதிட்டி, யாழ்ப்பாணம்.
போன்: 518

---

அனைவருக்கும் அன்பு கலந்த
பொங்கல் வாழ்த்துக்கள்
## வசந்தா வஸ்திராலயம்
இலக்கம் 20, (மேல்மாடி) மக்கள் நவீன சந்தை,
யாழ்ப்பாணம்,

0 பாடசாலைப் பிள்ளைகளுக்குத் தேவையான சீருடை (Uniforms) ரையிஸ் (Ties) தையல் செய்ய
0 குழந்தைகள், பிள்ளைகளின் சட்டைகள், பெண்களின் ஆடைகள் நவீன முறையில் தையல் செய்ய
0 கோயில்களுக்குத் தேவையான திரைச் சீலைகள் வரைதல், பிறின்ரிங் செய்ய
0 துணிவகைகள் சாயமிட, பிறின்ரிங் செய்ய

நீண்டகால அனுபவமும் திறமையுமிக்க
சிறந்த ஸ்தாபனம்.
**விஜயம் செய்யுங்கள்!**

---

# KALYANI CREAM HO

ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது உளங்கனிந்த பெ


## "கல்யாணி கிறீம் ஹ

சகலவிதமான ஐஸ்கிறீம் வகைகளுக்கும் குளிர்பான வகைகளுக்கும், மட்டன்ரோல், க
மற்றும் பொம்பே சுவீற் வகைகளுக்கும் குடும்பத்துடன் விஜய

TASTE OUR DANISH IMPORTED "LIDANO" ICE CREAM IN THREE FLAVOURS CHO

**73, KASTURIAR ROAD, JAFFNA.**

---



எமது வாடிக்கையாளர்கட்கும்
எமது மனங்கனிந்த பொங்

எமது பிரதிநிதியால் இங்கிலாந்தில் பரிசீலனை
பீஎம்சி வான் லொறிகளும் உதிரிப்பாகங்க
தேவையானேர் தமது பெயர் விபரங்களை
முற்பணம் தேவையி

**டீசல் என்ஜின் கியர் பொக்சுடன் / தனி கியர் பொக்ஸ்**

1 . 5 எ 60 மொறிஸ் மறினு, ஒக்ஸ்போட் போன்ற இதர கார்கட்கு இணைக்கக் கூடியவை.
2 . 2 எல். டி. வான்கட்டும் அதே போன்ற இதர வான்கட்டும்
3 . 4 செவ்லட் வான்கட்கும் அதேபோன்ற இதர வான்கட்கும்.
3 . 8 செவ்லட் வான்கட்கும் சிறிய லொறிகட்குப்.
5 . 1 5 ரொன் ரெட்டர்பம் ரைப் 22 சிறி லொறிகட்கு
5 . 1 5 ரொன் பெர்மீட் மொடல், 24 சிறி 2000 தொடர்புடைய லொறிகட்கு.
5 . 1 5 ரொன் 24 சிறி 5000 தொடர்புடையவற்றிற்கும், அதற்கு மேலும்.

**5 ரொன்பி.எம்.சி நோமல் / மொக்கன் லொற உதிரிப்பாகங்கள் 830 WF 900 FG**

டிபறென்சல் கொம்ளீட் அசெம்பிளி பின்கப், அக்சில் கிறவுண்வீலும் பீனியனும் ஸ்ரேறிங் பொக்ஸ் புறப்பலர் சாவ்ட் (போயின்ட்)
முன்வில்லு - பின்வில்லு செற் பிறேக் சேர்வோ
மாஸ்டர் சிலிண்டர்.
றேடியேற்றர், சசிபிறேம்
முன் அக்சில்பீம் கொம்ளீட் அசெம்பிளி
முன் அக்சில்பீம் - ரைறொட் ஆம்
ஸ்ரப் அக்சில்.
முன் மட்காட்
றேடியேற்றர் கிறில்
வபர்
டாஸ்போட் முதலியன

ரிப் ...
5 ...
5 ...
5 ...
3 ...
3 ...
3 ...
2 ...
2 ...
2 ...
2 ...
2 ...
2 ...
1½ ...
1½ ...
எம ...
லொ ...
மிட ...

பல முழு வாகனங்களைக் கழட்டி, பாவிக்கக் கூடிய சிறந்த உதிரிப்பாகங்களைத் தே
உங்கள் பிஎம்சி வாகனங்கட்குத் தேவையான எவ்வித உதிரிப்பாகமும் எம்மி

என்ஜின் கியர்பொக்ஸ் மற்றும் பிரதான உதிரிப்பாகங்கள் இங்கிலாந்து அரசாங்
பார்வையிட்டு அங்கீகரிக்கப்பட்டு இறக்குமதி செய்யப்பட்டன.

# துரை

ஆர். ஜி
66, ஸ்ரான்லி றேட், யா
தொலை பேசி:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ம் பொங்க
## ழிகாட்டட்டும்!

லாக கருதவேண்டும்.

உழவரது ஆக்கமாம் நெல் மணிகளும் குயவரது ஆக்கமாம் புதுப்பானையும் இடையரது ஆக்கமாம் பசும்பாலும் ஒன்றிணைந்து "பொங்கல் மகிழ்ச்சியை தோற்றுவிப்பது போல் சமுதாயத்தின் பல பல நிலைகளில் வாழும் நாமும் ஒன்றிணைந்து "சமுதாய மகிழ்ச்சியை" தோற்றுவித்து உலகெங்கும் மகிழ்ச்சி பொங்க வைப்போமாக. இன்றும்போல் என்றும் இன்பத்தை பொங்கவைப்பது எம் கையிலேயே உள்ளதென் பதை இந்நாளில் நெஞ்சிருத்துவோம்.

## ஏருங் கலப்பையும்

ஏருங் கலப்பையு மின்னூட்டுச் செல்வமடா-இதை
இன்றுநாம் ஏற்றவகை எடுத்தாள வேணுமடா
யாருஞ் செய்ய இசைந்த தொழிலடா-பண்டு
இருந்தோ ரெல்லாம் பாதுகாத் தாரடா

ஏரை நடத்த எருதோட்டு முழவனடா-இங்கு
ஏழைகட் குணவளிக் குமினிய தோழனடா
வாரி வழங்கும் வள்ளல் உழவனடா-இவனுக்கு
வசதிகள் வகுத்து வைப்பா ரில்லையடா

ஆருக்கு மடிமை யாகாத் தொழிலடா-இதனால்
ஆக்கந் தருபணி அளவி லாதடா
ஊருக் குழைக்கு முயர்ந்த உழவனடா-இவனை
ஊக்கட படுத்த ஒருவரில் லையடா

உழவன் நாட்டின் உயிர்நா டியடா-இவனே
உண்டி யளிக்கு முயர்ந்த தொண்டனடா
உழைப்பா லுடல்வலி உணங்கு காலமடா-இவனுக்கு
உழைப்பூ தியத்திட் டமொன்று தேவையடா

ஊருக்கா யுழைத்தே உடல்நலி வானடா-இவனை
உற்சாகப் படுத்த உழவுவிழாத் தேவையடா
பாருக் கிவன்செய் பணிகள் பலதடா-இவனைப்
பாராட்டி யடிக்கடி பரிசளிக்க வேணுமடா.

கண்டாவளை 'உழவன்'

அனைவருக்கும் அன்புகலந்த
பொங்கல் வாழ்த்துக்கள்!
0 அபிஷேகச் சாமான்கள்
0 அத்திபாரச் சாமான்கள்
0 விவாக முகூர்த்தப் பொருட்கள்
மற்றும்
கோவில் தேவைகளுக்கான
சகல மருந்துச் சாமான்களும்
மலிவான விலையில் பெற்றுக்கொள்ளலாம்
க. செ. கைலாசம்பிள்ளை அன் சன்ஸ்
(மருந்துச்சரக்கு வியாபாரம்)
76, பெரியகடை, (போன்: 7135) யாழ்ப்பாணம்.

M HOUSE
னிந்த பொங்கல் வாழ்த்துக்கள் !
ம் ஹவுஸ்"
டன்றோல், கட்லற், பற்றிஸ், கேக், பூந்தி, மஸ்கட்
துடன் விஜயம் செய்யுங்கள்.
LAVOURS CHOCOLATE, STRAWBERRY & VANILLA.
NA. HELLO: 8077.

## தமிழர்...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

லங்களில் உணவு குறைவின்றிப் பொங்க- உலகில் அமைதியும் அறிவும் ஆனந்தமும் பொங்க-இறையருள்பொங்கிப் பெருக வாழ்த்துகிறோம்.

அனைவருக்கும் எமது அன்பு கலந்த
பொங்கல் வாழ்த்துக்கள் !
இத் திருநாளில் உங்கள் இதயம் கவர்ந்த தங்க, வைர நகைகளைத் தெரிவு செய்ய மறவாதீர்கள்.
பொ. அம்பலவாணர்
தங்க, வைர, நகை வியாபாரம்
119, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 7199 தந்தி: "வைரம்"

அனைவருக்கும் அன்புகலந்த
பொங்கல் வாழ்த்துக்கள்!
கூடியவிரைவில் நாங்கள் சைக்கிள் டயர்களும், ரியூப்புகளும் உற்பத்திசெய்யவிருக்கின்றோம் என்பதனை எமது ஆதரவாளர்கள் அனைவருக்கும் மிகவும் மகிழ்ச்சியுடன் அறிவிக்கின்றோம்.
∵ கவர்ச்சியானஇழை
∵ சொகுசான ஓட்டம்
∵ நீடிய பாவனை
∵ உத்தரவாதமுள்ள வேலைப்பாடு
ஆகியவற்றிற்கு உங்கள் தேய்ந்துபோன டயர்களை எம்மிடம் புதுப்பியுங்கள்
நோர்தேண் இன்டஸ்ரீஸ்
112, ஸ்ரான்லி ரோட், (போன்: 7158) யாழ்ப்பாணம்.

ளர்கட்கும் ஆதரவாளர்கட்கும்
த பொங்கல் வாழ்த்துகள்!
பரிசீலனை செய்யப்பட்டு சீர்திருத்தப்பட்ட
திரிப்பாகங்களும் இறக்குமதியாகின்றன.
விபரங்களை எம்மிடம் பதிவுசெய்யவும்
ம் தேவையில்லை.
மாக்கன்
900 FG
பின்கப்,
ஸ்ரேறிங்
பொயின்ட்)
சேர்வோ
ரிப்பர்ஸ், லொறிகள், வான்கள், சசிகள்
நல்ல நிலையிலுள்ள கீழ்க்குறிப்பிட்ட
சிறந்த வாகனங்கள்
எம்மால் இறக்குமதியாகின்றன

| | | | |
|---|---|---|---|
| 5 | ரொன் | 830 WF | நோமல் பிளம்சி டீசல் ரிப்பர் |
| 5 | ,, | 900 FG | மொக்கன் ,, ,, ,, |
| 5 | ,, | 900 FG | ,, ,, ,, செசி காப்புடன் |
| 3 | ,, | 550 FG | செசி காப்புடன் |
| 3 | ,, | ,, | செசிகாப் பொடியுடன் |
| 3 | ,, | 420 FG | ,, காப்புடன் |
| 2 | ,, | 360 FG | ,, ,, |
| 2 | ,, | 350 FG | ,, ,, |
| 2 | ,, | 3?0 FG | ,, காப் பொடியுடன் |
| 2 | ,, | எல்டி 5 வான் | |
